# பொதுக்காலம் 13ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்கவர்களே! பொதுக்காலத்தின் பதிமூன்றாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்க வந்திருக்கும். அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

இன்றைய வாசகங்கள் நமது அடிப்படைத் தொழிலான விவசாயத்தை மையமாகக் கொண்டுள்ளது. கலப்பை, ஏர், நுகம் ஆகியவை பற்றிப் பேசப்படுகிறது. கலப்பைப் பிடித்து உழுது கொண்டிருந்த எலிசாவைத் தேடி வந்து தன் சீடராக எடுத்துக் கொள்கின்றார், இறைவாக்கினர் எலியா.

கலாத்தியரிடம் அடிமைத்தளை என்னும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்கிறார் பவுலடியார்.

கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல என சீடத்துவத்தின் பண்புகளைப் ப்ற்றி இயேசு கூறுகிறார்.

இயேசுவைப் பின்செல்ல விரும்புகின்ற போது முன்னோக்கித்தான் பார்க்க வேண்டும், பின்னோக்கி அல்ல என்கின்றார். கடமையைச் செய்ய முன் வரும்போது சாக்குப்போக்குக்கு இடமிருக்கக்கூடாது. தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து விட்டு, பின் பணிகளை செய்ய முன் வர இறைவன் வாய்ப்புக் கொடுக்கின்றார்.

இறையாட்சியில் பங்குபெற விரும்பும் போது நாம் கடவுளுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். மற்ற அனைத்தையும் தியாக செய்ய முன் வர வேண்டும். தூய ஆவியால் வழிநடத்தப்படும் போது இறைச்சித்தத்திற்கு ஏற்ற செயல்களையே நம் வாழ்வில் மேற்கொள்வோம்.

நம் சிந்தனையில் இறைவார்த்தைகளை ஏற்று நம் உள்ளத்தை உழுது, நிலவாழ்வு என்னும் விளைச்சலை அடைய ஈடுபாடு உள்ள கிறிஸ்தவ வாழ்வை உயிரோட்டத்துடன் பெற்றுக் கொள்ள இத்திருப்பலிக் கொண்டாட்டத்தில் பக்தியுடன் பங்கேற்போம்.

### முதல் வாசக முன்னுரை: 1 அரசர்கள் 19: 16b, 19-21

இன்றைய முதல் வாசகத்தில் ஏர் பூட்டி, உழுது கொண்டிருந்த எலிசாவை இறைவாக்கினராக அருட்பொழிவு செய்ததைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. எலிசாவின் மீது மேலாடையைப் போட்டு, எலியா இறைவாக்கினர் அழைத்தவுடன் எலிசா தனது

விவசாய வாழ்விலே அனைத்தையும் இழந்துவிட்டு இறைவனுக்குப் பணியாற்ற முன் வருகிறார். நமக்காக இறைவன் விடுக்கும் அழைப்பை உணர்ந்து கொள்ள கவனமுடன் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: கலாத்தியர் 8:7,9,13-15**

இன்றைய இரண்டாம் வாசகத்தில் அடிமை நிலையியிகுந்து உரிமை வாழ்வுக்குச் செல்வது குறித்து பேசும் திருத்தூதர் பவுலடியார், உரிமை வாழ்வில் ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பு அளிக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள் என்கிறார். தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழ நாம் முற்படும் போது நமது அழைப்பை உணர்ந்து நடக்கிறோம் என்று அறிவுறுத்தும் வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

**மன்றாட்டுக்கள்:**

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா!

திருஅவையை வழிநடத்தும் அனைவரும் பேதங்களின்றி கிறிஸ்துவின் மதிப்பீடுகளிலும், மகத்துவத்திலும், இறையாட்சிப் பணியிலும் நிலைத்து நின்று, தம் சொல்லாலும் செயலாலும் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ்ந்திடவும், உம் எளிய நுகத்தை மகிழ்வுடன் ஏற்று வாழ்ந்திட வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. சமத்துவத்தின் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் மனித நேயம் மிக்க நல்லாட்சி புரிந்து மக்கள் அனைவரையும் சமத்துவத்துடனும் அன்புடனும் வழிநடத்திடவும், மக்களுக்குத் தேவையான எல்லா பணிகளையும் சிறப்பாகநிதிறைவேற்றிடத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் இறையாட்சிக்கு உட்படத் தகுதியுள்ளவர் அல்ல என்று மொழிந்த இறைவா!

நாங்கள் எங்கள் வாழ்வில் ஏற்படும் இன்னல்களையும் தோல்விகளையும் ஏற்றுக் கொள்ளும் மனபக்குவத்தைத் தந்தருளும். இவற்றால் நாங்கள் உம்மோடு ஒன்றிணைகின்றோம் என்ற உணர்வினைப் பெற்று வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. எல்லாம் வல்லவரான தந்தையே இறைவா!

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் உம்மீது முழுமையாக நம்பிக்கைக் கொண்டு வாழவும், தங்கள் நம்பிக்கையால் உமக்கு ஏற்ற வாழ்வு வாழவும், அதனால் நிலைவாழ்வை, உரிமை வாழ்வைக் கண்டடைய துணைபுரிய வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. நிலைவாழ்வை அளித்திடும் எம் இறைவா!

எம் குடும்பங்களில் மரித்த விசுவாசிகள் மற்றும் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரித்த அனைவரும் நித்திய இளைப்பாற்றி அடைந்திடவும், உம் புனிதர்களின் திருக்கூட்டத்தில் அவர்களை இணைத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : ஆசிரியை திருமதி. ஞா.சொஸ்தினா மேரி, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com